தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(01.11.2023 முதல் 05.11.2023)

அறிக்கைஎண்: 87/2023 தேதி : 31.10.2023

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 - 33 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 26 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (01.11.2023 முதல் 05.11.2023).

| கடந்தவாரவானிலை (27.10.2023 முதல் 30.10.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (01.11.2023 முதல் 05.11.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 27/10 | நாள்-2 28/10 | நாள்-3 29/10 | நாள்-4 30/10 | தேதி | நாள்-1 01/11 | நாள்-2 02/11 | நாள்-3 03/11 | நாள்-4 04/11 | நாள்-5 05/11 |
| 0.0 | 4.1 | 9.7 | 28.1 | மழை (மி.மீ.) | 10 | 25 | 18 | 10 | 40 |
| 32 | 33 | 32 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 30 | 30 | 30 | 29 | 29 |
| 26 | 23 | 25 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 25 | 24 | 24 |
| 5 | 4 | 8 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |
| 83-70 | 92-79 | 98-95 | 92-94 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 92-90 | 92-90 | 92-90 | 90-88 | 90-88 |
| 0 | 0 | 2 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 7 | 7 |
| வடக்கு | வடக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 01.11.2023 முதல் 05.11.2023 லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 – 30 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 - 92 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88 - 90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 - 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| | | வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |
| நெல் | நடவு வயல் | எதிர்பார்க்கப்படும் மழையை கருத்தில் கொண்டு தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் / தள்ளிபோடவும். |
| | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக நெல்லில் குருத்துப்பூச்சி தோன்ற வாய்ப்புள்ளது. குருத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த மழை நின்றபின் இனக் கவர்ச்சிப்பொறிகளை ஏக்கருக்கு 4 என்ற அளவில் வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மேலும் இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி (அ) கார்டிராப் ஹைட்ரோகுளோரைடு குருணைகளை ஏக்கருக்கு 6 கிலோ வீதம் சம அளவு மணலுடன் கலந்தும் இடலாம். |
| வாழை | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வாடல் நோய் தோன்ற வாய்ப்புள்ளது. வாழையில் வாடல் நோயினை தவிர்க்க பேசிலஸ் சப்டிலிஸ் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி உயிர் பூசணக்கொல்லியை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் எடுத்துக் கொண்டு 250 கிலோதொழுஉரத்துடன் கலந்து வேர் பகுதியில் இடவும். |
| கால்நடைகள் | மாடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கறவை மாடுகளை பால்காய்ச்சல் நோய் தாக்கலாம். இதனை தவிர்க்க மாடுகளுக்கு 15 – 30 கிராம் கனிம கலவையை கருவுற்ற மாடுகளுக்கு கொடுக்கவும் |

## குறுஞ்செய்தி

வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும்.

**இயக்குநர்**